வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : STC 213 of 2024

வழக்கு சாட்சி – PW 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.அலெக்ஸாண்டர் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | செங்கமலை | தொழில் | : | இயக்குநர் |
| கிராமம் | : | சிங்கநல்லூர் | சமயம் | : | |
| தாலுக்கா | : | கோவை | வயது | : | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 23.02.2024.

குவிமுச 200 ன் கீழான பிரமாண வாக்குமூலம் : நாள்: 23.02.2024

நான் இந்த வழக்கில் புகார்தாரர் ஆவேன். எனது தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள சங்கதிகள் உண்மைதான் என்று உறுதி கூறுகிறேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பில் தாக்கல் செய்கிறேன்.

1) 03.09.2021 புகார்தாரர் நிறுவனத்தின் மெமரண்டம் ஆப் அசோசியேசன் மற்றும் ஆர்டிக்கில்ஸ் ஆப் அசோசியேசன் இணையவழி நகல் ம.சா.ஆ.1 ஆகவும்,

2) 07.09.2021 ஆம் தேதியிட்ட புகார்தாரர் நிறுவனத்தின் பதிவுச்சான்றிதழ் இணைய வழி நகல் ம.சா.ஆ.2 ஆகவும்,

3) 11.11.2021 ஆம் தேதியிட்ட புகார்தாரர் நிறுவனத்தின் ஜி.எஸ்.டி பதிவுச் சான்றிதழ் இணையவழி நகல் ம.சா.ஆ.3 ஆகவும்,

4) 20.11.2023 ஆம் தேதியிட்ட அதிகார கடிதம் அசல் ம.சா.ஆ.4 ஆகவும்,

5) இன்வாய்ஸ் மற்றும் பில் ஆப் சப்ளை (130 எண்ணிக்கை) அசல் ம.சா.ஆ.5 ஆகவும்,

6) 01.04.2023 ஆம் தேதியிட்ட வரவு செலவு அறிக்கை அசல் ம.சா.ஆ.6 ஆகவும்,

7) 16.08.2023 ஆம் தேதியிட்ட எதிரி எங்களது நிறுவனத்திற்கு வழங்கிய 000324 என்ற எண்ணிட்டதும், பாங்க் ஆப் பரோடா, செலக்கரிச்சல் கிளையில்

பெறப்பட்டதுமான காசோலை அசல் ம.சா.ஆ.7 ஆகவும்,

8) 27.09.2023 ஆம் தேதியிட்ட திருப்புகை மெமோ அசல் ம.சா.ஆ.8 ஆகவும்,

9) 06.10.2023 ஆம் தேதியிட்ட எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் ம.சா.ஆ.9 ஆகவும்,

10) 12.10.2023 ஆம் தேதியிட்ட எதிரி கையொப்பமிட்டு பெற்றுக்கொண்ட அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் ம.சா.ஆ.10 ஆகவும்,

11) 25.10.2023 ஆம் தேதியிட்ட எதிரி தனது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய பதில் அறிவிப்பு அசல் ம.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

புகார்படி தீர்ப்பாகவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/–க.சித்ரா,
நீதித்துறை நடுவர்
பல்லடம்